உ
சிவமயம்




யாழ்ப்பாணத்து அச்சுவேலிப்பதியிற்
பரம்பரைச் சைவவேளாளர் குலதிலகராய்
விளங்கிய
கந்தவனாலய ஆதீனகர்த்தராய் விளங்கிய
ஸ்ரீமான். திக்கம் செல்லையாபிள்ளை
அவர்களின் அன்பு மனைவியுமான

# திருமதி. இராசமுத்து

செல்லையாபிள்ளை
அவர்களின்

# நினைவு மலர்.

16-08-1993



திருமதி. செ. இராசமுத்து அவர்கள்

தோற்றம்: 08—06—1901 மறைவு: 01—08—1993

## விநாயக வெண்பா

மொழியின் மறைமுதலே, முந்நயனத் தேறே
கழியவரும் பொருளே, கண்ணே — செழிய
கலாலயனே, எங்கள் கணபதியே நின்னை
யலாலயனே சூழாதென் னன்பு.

## கட்டளைக் கலித்துறை

மின்னுங் கதிர் வடிவேலுண்டு வெற்றி மயூரமுண்டு
முன்னுந் திருமுக மாறுண்டு முண்ட டகத்தாளுமுண்டு
மன்று மருளுமுண்டு கும்பிடக் கந்தவனமு முண்டால்
இன்னும் பயமுனக் குண்டோ மறலியெதிர்கினுமே.

## கந்தவனநாதர் பதிகம்

வற்றாத கருணைப் பெருங்கடலி லன்பெனும்
    மத்திட் டுணர்ச்சி கயிறாய்
மாறாது கடையவந் திடுஞான வமுதமே
    மற்ற தனிலுற்ற பயனே
பற்றாதவர்க்கு மருள்நீதியே யாதியே
    பவவிருட் கொரு சோதியே
பார்க்கத் தெவிட்டாத வழகொழுகு தெய்வமே
    பாவலர்கள் சேமநிதியே
அற்றார்க் களித்திடும் பேரின்பவாரியே
    ஆறுமுக ஞானமலையே
ஐயனே ஈராறுகையனே மெய்யர்நெஞ்
    சகலாத மணிவிளக்கே
கற்றார் விழுங்கிடும் கனியே யடைக்கலங்
    கண்ணருள் செய்கந்தவனம் வாழ்
கலபமர சதமயிலி னலகிலுயிர் தழையவரு
    கலியாண வேல்முருகனே.

## அரிய வேண்டுகோள்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடுவராத நட்பும்
குன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாதஉடலும்
சலியாத மனமும் அன்(பு) அகலாத மனைவியும்
தவலாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்பம் இல்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும்உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்!
அலைஆழி அறிதுயில்கொள் மாயனது தங்கையே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீஸர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

## கந்தர் அநுபூதி

எந்தையும் எனக்கு அருள் தந்தையும்நீ
சிந்தாகுல மானவை தீர்த்து எனையாள்,
கந்தா! கதிர்வேலவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறைநாயகனே!

## வாயுறை வாழ்த்து

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

போமிளமை செல்வமெனப் புலம்புற்று
மடியாமல் புவியின்மீது
தோமறு நேர்க்காந்தமதை எதிர்க்காந்தம்
இழுத்தவென இழுத்து நம்மை
ஏமமுறச் செய்திடவே இருக்கின்றான்
கந்தவனத் திறைவன் நல்லீர்!
காமமுறக் கடம்பனடி கைதொழுவோம்
அவன்தானே காத்து நிற்பான்.

## திதிவெண்பா

ஆண்டு ஸ்ரீமுகமா வாடிபத் தேளாம்நாள்
பூண்ட பௌர்ணமித் திதியிற் பூர்வமைந்து — வேண்டும்
அறிவாரீசான சிவனை யனருள் பெற்றுத்
திருமேனி நீங்குந் தினம்.

## வெண்பா

கந்தவ னத்துக் கடவுள் திருவடிகள்
சந்ததமும் எண்ணும் தவமுடையாள் — சிந்தையிலே
பொன்னம் பலத்தடிகள் போற்றிவரும் புண்ணியத்தாய்
மன்னும் பிறப்பறுத்தாள் வாழ்ந்து.

## புதல்வியர் புலம்பல்

அறுசீர் விருத்தம்

தந்தையின் சைவத் தொண்டும் தாயேநின் கலையின் தொண்டும்
ஒன்றிய பயனால் வந்து உதித்தனம் உன்வ யிற்றில்
சந்தண மரத்தின் வாடை சார்ந்தவெம் புக்கு முண்டு
கந்தர்வ கான ஞானம் கைவரப் பெற்றோ மம்மா.

பல்கலைக் கழகப் பட்டம் பெற்றிட வகைகள் செய்தாய்
கல்வியைப் பயிற்று மாசார்க் குரைசெயும் பணியும் பெற்றோம்
வல்வினை கூட்ட வந்த வழிவழி மீண்டா யம்மா
சொல்லருஞ் சோகம் சூழச் சொரிகின்றோம் கண்ணீர் தாயே.

தந்தையைப் பிரிந்த சோகம் தாரணி அழியும் ஒல்லை
சந்ததம் வருத்துமம்மா தாயே உன்தஞ் சமென்று
நம்பியே வாழ்ந்த நம்மை நட்டாற்றில் விட்டாய் தாயே
வந்திடும் ஏழுபி றப்பும் வருத்துமத் துன்ப மம்மா.

## மருமக்கள் புலம்பல்

பெற்றவள்தான் தாயென்ற பிதற்றல் தன்னை
போக்கியெமைப் பிள்ளைகள்போல் பார்த்த மாமி
நற்றவத்தி னாற்பெற்ற நங்கை மாரை
நம்மனைக ளாக்கிவைத்து நாம்வி ரும்பும்

பொற்குவையும் வீடுநிலம் பொரியத் தந்து
பொழுதெல்லாம் இன்பமாய் வாழச் செய்தாய்
சொற்களிலே கூறுவமோ சோகந் தன்னை
துயர்க்கடலுக் கொருதுளியைக் காட்ட லாமோ.

## சகோதரர் புலம்பல்

எண்சீர் விருத்தம்

அக்காவென் றழைத் துந்தன் இல்லம் வந்தால்
அக்கினிமேல் நடப்பவள்போல் ஓடி வந்து
எக்கா ரணம்தம்பி இங்குற்ற தென்று
எம்துன்பம் விசாரித்து அதனைப் போக்கி
முக்காலும் உணவூட்டி முகம்ம லர்ந்து
முழுமதியைக் காலடியில் தருவாய் அக்கா
எக்காலம் இனியுன்னைக் காண்போம் மீண்டு
ஒருவயிற்றில் பிறக்கின்ற காலம் உண்டோ

## பேறாமக்கள் புலம்பல்

பெற்றால்த்தான் பிள்ளையென்ற பேதை மையைப்
போக்கியெமைப் பேணிவளர்த் திட்ட தாயே
குற்றாலத் தருவியெனக் குளிர்ந் அன்பைக்
கொட்டியெமை அணைத்திட்ட தெய்வத் தாயே
கற்றாவைப் பிரிந்திட்ட கன்று போல
கதறியழ விட்டுவிட்டு எங்கே சென்றாய்
பொற்கோயில் வீற்றிருந்த தெய் வமேநீ
போனதின்பின் வெறுங்கோயில் ஆன தம்மா.

## பேரர் பேர்த்தியர் புலம்பல்

கலைக்கோயில் தனில்வந்து கால மெல்லாம்
கண்கண்ட தெய்வமுனைத் தொழுது கல்வி
மலைவாழை யென்றுநீ தந்த ஊக்கம்
மனிதராய் சமூகத்தில் வாழு கின்றோம்
தலையாய கல்வியிலே உயர்கு டும்பத்
தரத்தினைநாம் காத்துநின் றோம் அம்மம் மாவுன்
சிலையெழுதி சாகும்வரை வணங்கி நிற்போம்
சின்மறன் றாள் தனிலமைதி காண்பாய் தாயே.

## பீட்டர் பீட்டியர் புலம்பல்

முற்றத்தி லேயிருந்து மூன்றுகல்லால் அடுப்பாக்கிச்
சுற்றவுள சிரட்டைகளில் மண்ணரிசிச் சோறுபொங்கி
பற்றையிலே இலைபிடுங்கிப் பாகற்காய் கறிசமைத்து
பற்றுடனே பாட்டிக்குப் பகிர்ந்தநாள் இனிவருமோ.

## தேற்றம்

ஆக்கமும் அழிவும் அலர்வதும் உதிர்வதும்
தூக்கமும் விழிப்பும் துன்பமும் இன்பமும்
இரவும் பகலும் இறப்பும் பிறப்பும்
ஒருநா ணயத்தின் இருமுகம் போன்று
இருமைத் தாயினும் கருவினில் ஒருமையே
அதனால்
இன்மொழி இராச முத்து இறைபதம்
எய்திப் பேரின்ப சாயுசய மடைந்து
பவக்கடல் நீந்தினள் சாந்தி
கவலை விடுவீர் கடமைகள் புரிவீர்.

யோகியரும் ஞானியரும் ஞானமிளிர் தாயினரும்
வேகுடலம் விட்டதனைக் கண்டோமே — ஞாலமதில்
தெய்வபதப் பேறென்றே கொண்டால் இதுகண்டு
செய்யறம் செய்தே தணி.

## நன்றி

காலஞ்சென்ற இராசமுத்து - செல்லையாபிள்ளை
அவர்களின் இறுதிக்கிரியையிலும்,
அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்து துக்கம்
பகிர்ந்தோர், துணைநின்று உதவினோர்,
துயராறச் செய்தி அனுப்பினோர்
அனைவருக்கும் இதய நன்றி.

கந்தவனம்,
திக்கம்.

— பிள்ளைகள்.

## அமரர். திக்கம் செல்லையாபிள்ளை

அவர்களின் மனைவி

# திருமதி. இராசமுத்து அவர்களின் வம்சாவழி.

### மக்கள்:

திருமதி. நாகபூஷணி
செல்வி. பார்ப்பதியம்மை
திருமதி. பொன்னம்மை
திரு. யோகீந்திரன்
செல்வி. யோகாம்பிகை
திருமதி. சிவலோகநாயகி

### மருமக்கள்:

திரு. குமாரசாமி
திரு. பத்மநாதன்
திரு. இராமநாதன்
திருமதி. கமலாம்பிகை

### பேரப்பிள்ளைகள்:

ஜெயமனோகரி
ஸ்கந்தாரண்யன்
செல்லையாபிள்ளை
குழந்தைவேலன்
சுமதி
செல்லையாபிள்ளை ரஞ்சன்
ரமேஷ்
குழகன்
கார்த்திகாயினி

### சகோதரர்கள்:

திரு. இரத்தினம்
திரு. இராசக்கோன்
திரு. திரவியம்

### பீட்டப்பிள்ளைகள்:

ஜனகன்
அபிராமி
தக்ஷாயணி
கங்காசுதன்

### பெறாமக்கள்:

திரு. நமசிவாயம்
திரு. குழந்தைவேலு
திரு. சின்னத்தம்பி
திரு விவேகானந்தம்
சாந்தநாயகி
மனோன்மணி
பதாபக்தி
யோகானந்தம்

நவஸ்ரீ
அச்சகம்,
நெல்லியடி.